திரு. க. சுப்பு : இந்தக் கேள்விக்குப் பதிலளித்த பார்லிமெண்டரி செக்ரடரி அவர்கள் கடலரிப்பைத் தடுப்பது பற்றிய பழைய திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது தெரிவித்த விளக்கம் கடலரிப்பைத் தடுப்பது பற்றிய புதிய திட்டமாகும். திருவொற்றியூருக்குள்ளேயே கடல் வந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசு இந்தக் கடலரிப்பைத் தடுக்க என்ன புதிய திட்டம் வைத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதுபற்றிய திட்டம் முழுமையாக உருவாக்கப்பட்டவுடன் நிச்சயமாக இந்த அவையில் வைக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபகாலத்தில் வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததற்குப் பிறகு, கடலை நிலமாக்குவோம், அந்த நிலத்தை வீடாக்குவோம் என்ற திட்டத்தோடு வந்திருக்கிறார்கள் என்று பத்திரிகை வாயிலாகப் பார்த்தோம். அப்படி ஏதேனும் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறதா இல்லையா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ; முன்பு நான் குறிப்பிட்ட பதிலிலேயே இதற்கும் பதில் அடங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மினி பரிசுச் சீட்டுத் திட்டம்.

* வினா எண். 2—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மினி பரிசுச் சீட்டுகளை நடத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

திரு. எம் வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

1979 பிப்ரவரி 12]

திரு. என். கிட்டப்பா : அண்மையில் கர்நாடக மாநிலத்தில் கூட வாரந்தோறும் குலுக்கப்படும் பரிசுச் சீட்டுகளை வெளியிட்டிருக்கிறார்கள். அதைப்போல் தமிழ்நாட்டிலும் வாரந்தோறும் குலுக்கக்கூடிய பரிசுச் சீட்டுகளை நடத்த அரசு ஆலோசிக்குமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பரிசீலிப்போம்.

திரு. மு. அரங்கநாதன் : இந்தப் பரிசுச் சீட்டு தமிழக அரசின் சார்பில் வெளியிடப்படுகிறது. இந்தப் பரிசுச் சீட்டை விற்கிற ஏஜன்சிகள் தமிழகப் பரிசு சீட்டு தேவையானால் அடுத்த மாநில பரிசுச் சீட்டை வாங்கினால்தான் தருவோம் என்று தகராறு செய்கிறார்கள், தனியாக இந்தச் சீட்டு மட்டும் வேண்டுமென்றால் ஒரு ரூபாய் சீட்டுக்கு ஒன்றேகால் ரூபாய் கொடுத்தால்தான் தருவோம் என்று சொல்லுகிறார்கள். அண்ணா சாலையில் நானே வாங்கியபோது இப்படிச் சொன்னார்கள். அப்போது என் கூட ஆளும் கட்சி உறுப்பினர் திரு. சமரசம் கூட இருந்தார்கள். அப்போது பெரிய குழப்பமே வந்து விட்டது. இதைப் பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தனிக் கேள்வி போடவும்.

திரு. என். கிட்டப்பா: நமது தமிழ்நாட்டில் தனிப்பட்டவர்கள் சில பேர் கலை நிகழ்ச்சி, நாடக மன்றம் என்று வைத்துக் கொண்டு டிக்கட் விற்று பரிசுக் குலுக்கல்கள் நடத்தி பெரும் லாபம் பெறுவது அரசுக்குத் தெரியுமா ? இவ்வாறு தனியார் பரிசுச் சீட்டு விற்பனை செய்து லாபம் பெறுவதைத் தடை செய்ய அரசு முன்வருமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. க. மருதாசலம் : வேறு மாநில பரிசுச் சீட்டுகளை இங்கே விற்கக் கூடாது என்ற அரசு ஆணை முன்பு இருந்த அரசால் பிறப்பிக்கப்பட்டிருந்தும் கூட வேறு மாநில பரிசுச் சீட்டுக்களை இங்கே விற்று வருகிறார்கள். அதைத் தடுக்க நம்முடைய அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்குமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : கேள்வி 'மினி' பரிசுச் சீட்டுத் திட்டம் துவக்கும் செயற்குறிப்பு உள்ளதா என்பதைப் பற்றியது.

[1979 பிப்ரவரி 12

[முற்பகல் 9.20].

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நடத்தப்படும் பரிசுச் சீட்டுக் குலுக்கலிலாவது மினி குலுக்கல் நடத்துவதற்கு இந்த அரசுக்கு எண்ணம் உண்டா ?

திரு. எம். வின்சென்ட் அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கேள்வியிலேயே நான் பதில் சொல்லிவிட்டேன்.

ராணுவத்தினருக்கு வழங்கப்பெற்ற பட்டாக்கள்.

*வினா எண். 3—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர், விழுப்புரம் தாலுக்காக்களில், தற்பொழுது பணிபுரியும் ராணுவத்தினர், முன்னாள் ராணுவத்தினர் முறையே எத்தனை பேர் பட்டா வழங்கக் கோரியுள்ளார்கள் ?

(ஆ) எத்தனை நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :—(அ) 1977–78 ஆம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்தில், 36 பேர்களும், விழுப்புரம் வட்டத்தில் 15 பேர்களும் நில அடமானம் கோரி மனு செய்துள்ளனர்.

(ஆ) அதில் திருக்கோவிலூர் வட்டத்தில் ஒருவருக்குக் கூட நில அடமானம் செய்யப்படவில்லை. விழுப்புரத்தில் 3 பேர்களுக்கு 8·50 ஏக்கர் பரப்புள்ள நிலம் அடமானம் செய்யப்பட்டுள்ளது.

வேளார்குளம் இனாம் கிராமம்.

* வினா எண். 4—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தாலுக்கா, வேளார்குளம் கிராமம் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வந்துள்ளதா ?